[1973 பிப்ரவரி 12

பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள்

* 123 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சாதாரண மைனர் பஞ்சாயத்துகளில் இம்மாதிரி அதிகாரிகள் இல்லாத காரணத்தினால், எல்லா ஊராட்சி மன்றங்களிலும் அல்ல, பல ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் செக்குகளில் தன்னிஷ்டப்படி கையெழுத்துப்போட்டு பணத்தை எடுத்து அந்தப் பணத்தை ஒழுங்காகப் பஞ்சாயத்திற்குச் செலவிடாமல் தங்களுடைய சொந்த நலன்களுக்காகச் செலவிடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுப்பதற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு அதிகாரி என்று இல்லாவிட்டாலும்கூட, நான்கைந்து மைனர் பஞ்சாயத்துக்களை ஒன்றாகச் சேர்த்தாவது ஒரு நிர்வாக அதிகாரியை விரைவாக நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய எல்லாக் கருத்துக்களும் ஆராயப்பட வேண்டியவையாக இருக்கின்றன. அரசு இதைப்பற்றி பரிசீலித்து வருகிறது. இப்பொழுது சில ஊராட்சி மன்றங்களில் வருமானமே 900 ரூபாய், 1,000 ரூபாய், 1,600 ரூபாயாக இருக்கிறது. அங்கே நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதற்குப் போதுமான அளவிற்கு அவர்களுக்கு வருமானம் ஏற்படவில்லை. சட்டதிட்டத்தின்படி பேரூராட்சி மன்றங்களில் நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும்பொழுது அங்கேயிருக்கும் தலைவருக்கு செக்குகளில் கையெழுத்துப்போடும் உரிமை வராது. நிர்வாக அதிகாரிக்குத்தான் அந்த உரிமை வருகிறது. ஆனால் சிற்றூராட்சி மன்றம், ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் மட்டுமேயிருப்பதால், அவர்கள் சாதாரணமான முறைகளில் பகுதி நேர எழுத்தர்களை வைத்து, 10 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் சம்பளமாக வழங்கப்படுகிறது. செக்கில் கையெழுத்துப் போடும் உரிமை, சட்டத்தின் 40 (2) விதியின்படி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஆகவே, செக்குகளில் கையெழுத்துப் போடு

1973 பிப்ரவரி 12]

கிருர்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப் போன்று, தவருகச் செலவழிக்கிருர்கள் என்றுல், அது கண்டறியப் பட்டு அறிவிக்கப்பட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றவைகளுக்கும் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அவ்வளவு சுலபத்தில் செக்குகளில் கையெழுத்துப்போட்டு சொந்தத் திற்கு எடுத்துக்கொள்ள முடியாது. செக்கில் கையெழுத்துப்போட்டுப் பணத்தைப்பெற்று, வேலே நடந்ததாக வேண்டுமென்றுல் காண்பித்து விட்டு எடுத்துக் கொள்பவர்களாக இருக்கக்கூடும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு விசாரணைக்கு வந்து நிரூபிக்கப்பட்டால் அந்தத் தலைவரின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, வருமானம் குறைவாக இருக்கும் சிறு பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக அதிகாரிகளை அமைக்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித் தார்கள். 2,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள பஞ்சாயத்துக் களுக்கு நிர்வாக அதிகாரிகளை அமைக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, லோயர் டிவிஷன் கிளார்க் அளவிற்கு நியமிக்கப்பட்டாலே மாதம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 210 ரூபாய் அளிக்க வேண்டியிருக்கும். அந்த வகையிலே பார்த்தால் அந்தப் பணம் முழுவதும் அவர் ஒருவருக்கே அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே தான் இதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது. இரண்டு, மூன்று ஊராட்சி மன்றங்களை ஒன்றுக இணைக்கலாமா அல்லது அவர்களுக்கு வரும் பணத்தோடு கூடத் தந்து ஒவ்வொரு ஊராட்சி மன்றத் திலேயும் நிர்வாக அதிகாரி என்று இல்லாவிட்டாலும் ஒரு எழுத்தரையாவது முழு அளவில் நியமிக்கலாமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்கப்படுகிறது. அந்தப் பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு தக்க முடிவெடுக்கப்பட்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இவ்வாறு நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? அப்படிக் கொடுக்கப்படும்பொழுது எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை அந்த வேலைக்கு நியமிப்பதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 பிப்ரவரி 12

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வேலைவாய்ப்பு எவ்வளவு பெருக்குக் கிடைக்கும் என்பதல்ல. எவ்வளவு பண வாய்ப்பு கிடைக்கும் என்பதுதான் மிகமிக முக்கிய மான பிரச்னையாக இருக்கிறது. பண வாய்ப்புக் கிடைத்தால் வேலை வாய்ப்பு எளிதாக ஏற்பட்டுவிடும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிற பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு, இந்த நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படுவதால், பஞ்சாயத்துத் தலைவர் களின் அதிகாரம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அதிகாரிகளை நம்புகிற அரசு மக்களின் பிரதிநிதிகளை நம்ப மறுப்பதன் காரணம் என்ன? எதிர்காலத்திலாவது காசோலைகளில் மக்களின் பிரதிநிதி களான தலைவர், நிர்வாக அதிகாரி ஆக இரண்டுபேரும் சேர்ந்து கூட்டாகக் கையெழுத்துப்போடும் முறை அமலுக்குக் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் கேட்ட கேள்விக்கு நேர்மாறான கேள்வியை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். திரு. கிட்டப்பா அவர்கள், ஏன் அதிகாரிகளிடத்திலே தரக்கூடாது, தலைவர்களுக்கு அந்த அதிகாரத்தை தந்து அதன காரணமாகப் பணத்தை எடுத்து சொந்த நலன்களுக்குப் பயன் படுத்திக்கொள்கிறார்கள் என்றும், ஏன் நிர்வாக அதிகாரிகளை வைக்கக் கூடாது என்றும் கேட்கிறார்கள். ஆனால் நீங்கள் நிர்வாக அதிகாரியை ஏன் வைத்திருக்கிறார்கள். தலைவருக்கே அந்த உரிமையைத் தரலாமே என்ற கருத்தைக் கூறுகிறீர்கள். எனவே தான், இருக்கின்ற சூழ்நிலைகளைப் பார்த்து, சுமுகமாக, ஒழுங்கான முறையில் நிர்வாகம் நடப்பதற்கான வாய்ப்பு வசதிகளை ஆராய்ந்து முடிவுக்கு வர வேண்டும். ஆகவே பல்வேறு கருத்துக்கள் ஆராயப் பட்டு ஒரு முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

யானைக்கால் நோய்த்தடுப்பு

* 124 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் (Filaria) நோயினைத் தடுத்து நிறுத்த அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் யாவை?

1973 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவரப்பட்டியல் @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த யானைக்கால் வியாதி பெரும்பாலும் சலவைத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய பகுதிகளில் மிக அதிகமாகத் தென் படுவதாகக் கூறப்படுவதால் அவர்கள் வசிக்கும் பகுதிகளில் அதிக மான கவனத்தைச் செலுத்தி, தனி அதிகாரிகளை, சுகாதார அதிகாரிகளை நியமித்து அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, யானைக்கால் வியாதி முற்றிப்போய், கண்ணுக்குத் தெரிகிற அளவிற்கு யானைக் காலாக ஆன பிறகு சிகிச்சை தருவது என்பது உண்மையான சிகிச்சை அல்ல. கண்ணுக்குத் தெரிந்த கால்களை வைத்துக்கொண்டு இந்தச் சிகிச்சைத் திட்டத்தை நடத்தவில்லை. யானைக்கால் வியாதி வரும் வகையில் அந்த வட்டாரத்திலே கொசுக்கள் பரவி, அந்தக் கொசுக்கள் கடிப்பதன் காரணமாக இரத்தத்திலே கிருமிகள் சேர்ந் திருப்பது கண்டுபிடிக்கப்படுமேயானால் அந்தக் கட்டத்திலே சிகிச்சை அளிப்பதால் இந்த வியாதி முற்றாமல் இருக்கிறது. இது ஏதோ நெசவாளர்களுக்கும், அல்லது சலவைத் தொழிலாளர்களுக்கும் மட்டும் ஏற்படக்கூடிய வியாதி அல்ல. இது அக்ரஹாரத்திலிருந்து ஆதித் திராவிடர்கள் வசிக்கும் பகுதிவரை எங்கும், எல்லா வகுப்பு களிலும் பரவியிருக்கிற ஒன்று. அது வட்டாரத்தைப் பொறுத்தது. வட்டார அளவிலே கவனிக்க ஆவன செய்யப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த நோய் எங்கு அதிகமாகப் பீடித்திருக்கிறது என்பதை ஆய்ந்தறிந்து, சென்சஸ் எடுத்திருக்கிறார்களா? அப்படியிருந்தால் அந்தப் பகுதிகளில் தீவிர கவனம் செலுத்துவதற்கு என்ன முனைப்புத் திட்டம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படி எடுக்கப்பட்ட பகுதிகளில் எட்டு மிக முக்கியமான பகுதிகள் என்று இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு அந்த ஒழிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த எட்டு இடங்கள், விழுப்புரம்

@ 457–458-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.